தமிழிசை- சங்கம் முதல் சினிமா வரை

முன்னுரை

மயிலையின் வீதிகளில் பஜனை சத்தத்துடன் இளங்காலைப் பொழுதில் இனிதாய் மார்கழி பிறந்து விடும். திருவல்லிக்கேணித் தெருக்கள் திருவிழாக் கோலம் பூண்டிருக்கும். இளவயதில் தெருவெங்கும் அடைத்து வண்ணம் கோலம் போட்டது, என் மனதில் அழியாக் கோலமாய் இன்னமும் இருக்கிறது. அடுத்த நாள் என்ன கோலம் போடுவது என்பது தலையான கேள்வியாய் இருக்க, ஒரு சிலர் இரவே கோலம் போட்டு விட, அதை பார்த்து விட்டு, அதைவிடப் பெரியதாய், வண்ண மயமாய் விடியற்காலையில் கோலம் போட்ட காலம் அது.
அமெரிக்கா வந்த பிறகு, இலேசாக வாயிற் கதவை திறந்தாலே பனிக்காற்று சில்லென்று வீசிவிடக் கோலத்தை கூகிள் வரைபடத்தில் தான் பார்க்க வேண்டும். கடந்த சில வருடங்களாக இசைக் கச்சேரிக்கென்று மார்கழியில் சென்னை செல்லும் வாய்ப்பாவது கிடைத்தது. தினமும் காலையில் 'இந்து' செய்தித்தாளை விரித்தபடி, யார் கச்சேரி எங்கு என்று படித்து, எந்தெந்த சபாவிற்கு செல்ல முடியும் என்று அட்டவணை இடுவது ஒரு சுகம். வெள்ளிக்கிழமைகளில் 'இந்து' செய்தித்தாளின் விரிவான இசை விமரிசனம் படிப்பது இன்னொரு சுகம். இரண்டும் தவிர வீட்டில் முன் அறையில் அமர்ந்த படியே தொலைக்காட்சியில் பாடகர்கள் வீட்டிற்கு வந்து பாடுவார்கள்.
இந்த வருடம் அந்த வாய்ப்பும் இல்லை. அமெரிக்காவில் இருந்தபடி, யு ட்யூப் துணையுடன், பரிவர்தினியில் பாட்டு கேட்கலாமா, ஜெயா தொலைக்காட்சியில் பார்த்து இரசிக்கலாமா என்ற விவாதமும், முகப்புத்தக விமரிசனங்களும் மட்டுமே எஞ்சி நிற்கிறது. அப்படியும், மார்கழியை மறக்க முடியாத அனுபவமாக மாற்ற முயற்சி தொடர்கிறது.

சென்ற வருட மார்கழியில் முகப்புத்தகத்தில், 'கண்ணன் அந்தாதி' எழுதினேன். இந்த முறை என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தேன். அப்போது ஒரு நாள். இந்துஸ்தானி இசையில் 16 அட்சரத் தாளம் இருப்பது போல் கர்நாடக இசையில் இருக்கிறதா என்று விளையாட்டாய் என் பிள்ளையின் பாட்டு வாத்தியாரைக் கேட்கப் போக, அதற்கு விடையாய் 'History Of South Indian Music என்ற புத்தகம் கொடுத்தார். திரு. ஆர் . ரங்கராமுனஜ அய்யங்கார் எழுதிய இந்த புத்தகத்தை பிரித்துப் படிக்க, படிக்க சிலப்பதிகாரத்திலும், சங்க இலக்கியத்திலும் இருக்கும் தமிழிசைப் பற்றிய தகவல்கள் என் ஆர்வத்தைத் தூண்டிவிட்டன. புத்தகத்தை முழுதாய் படிக்க முடியாது போனாலும், படிக்க படிக்க குறிப்பெடுக்கலாம் என்று தோன்றியது.
அந்த புத்தகக் குறிப்புகளும், www.shaivam .org போன்ற வலைதளப் பதிப்புகளும் இங்கு பரிமாறப்படும்...

இசையும் தமிழும் பாகம் -1

'பண்ணும் பதமேழும் பலவோசைத் தமிழவையும்

உள்நின்றதோர் சுவையும்வுரு தாளத்தொலி பலவும்

மண்ணில் புனலுயிரும் வருகாற்றும் சுடர் மூன்றும்

விண்ணும் முழுதான னிடம்வீழிம் மிழலையே '

திரு ஞானசம்பந்தர்

<u>பதங்கள் ஏழு (ஸ்வரங்கள் ஏழு)</u>

ச ரி க ம ப த நி எல்லோரும் அறிந்ததே. ஷட்ஜமம், ரிஷபம், காந்தாரம், மத்யமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம், என்பது இவற்றின் விரிவாக்கம் . இதற்கு தமிழில் முறையே

குரல், துத்தம், கைக்கிளை , உழை, இளி, விளரி, தாரம் என்று அழைக்கப்பட்டன.

ஸ்வரங்கள், பதம் என்றும் நரம்பு என்றும் அழைக்கப்பட்டன. சுருதி, அலகு என்றும் மாத்திரை என்றும் அழைக்கப்பட்டன.

பண்ணிசைப் பலவகை படும். நூற்று மூன்று வகைகள் இருந்ததாக சில குறிப்புகள் சொல்கின்றன. மிகப் பழைய நூலான பஞ்சமரபு என்ற நூலில் இது வெண்பா வடிவில் சொல்லப் பட்டிருக்கிறது.

பண்ணோர் பதினேழாம் (17)
பண்ணியல் பத்தேழாம்(70)
எண்ணுந் திறமிரண்டும் பத்தென்ப (12) - நண்ணிய
நாலாந் திறத்திற மோர் நான்கு (4)
முளப்படப்
பாலாய பண் நூற்று மூன்று (103)

சம்பூர்ண இராகங்கள் 17 மும், ஷாடவ இராகங்கள் 70 உம் , திறங்கள் 12 உம், திறத்திறங்கள் நான்கும் சேர்ந்து 103 ஆக இருந்தன.

தமிழரின் வாழ்கையில் ஐந்து நிலங்களுடன் பல பண்ணும் இசையும் இணைந்து இருந்ததாக வரலாற்று குறிப்புகள் சொல்கின்றன.

குறிஞ்சி

கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீயறியும் பூவே.

-இறையனார்

காதல் வயப்பட்ட தலைவன், காதலியின் கூந்தலில் இருக்கும் நறுமணத்தை, வண்டுகள் அறிந்ததில்லை, அதனாலேயே மலர்களை நாடுகின்றன என்று பாடுவது போல் அமைந்த பாட்டு இது.

பண்டைத்தமிழர் நிலங்களை ஐந்து வகைகளாகப் பிரித்தனர். அதே முறையில் பண்ணிசையும் நிலங்களைச் சார்ந்து குறிஞ்சிப் பண், முல்லைப்பண், மருதப் பண், நெய்தல் பண், பாலை பண் என்று அழைக்கப்பட்டன.

குறிஞ்சி - மலையும், மலை சார்ந்த நிலத்தையும் குறிக்கும். குறிஞ்சி என்றவுடன் மலை, காதல், மயில், முருகன் என்பவை நினைவுக்கு வரும்.
அந்த குறிஞ்சிப்பண், நாட்டுப்புறப் பாடல்களாக மாறி, பின்னர் குறிஞ்சி இராகமாக மாறியது.
ச நி ச ரி க ம ப த என்று ஆரோகணத்திலும் (ஆரோசையிலும்) த ப ம க ரி ச நி என்று அவரோகணத்திலும் (அமரோசையிலும்) அமைந்த இந்த இராகம் மிகவும் மங்களகரமான இராகம்.

பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை குறிஞ்சி மலர் பூத்தாலும், தியாகய்யரரின் மிகவும் பிரசித்த பெற்ற 'சூதா கல்யாண வைபோகமே' பாடல் மூலம் இந்த இராகம் உலகில் எந்த மூலையில் இந்து முறைப்படி திருமணம் நடந்தாலும் மூண்டும் மூண்டும் பூத்த வண்ணம் இருக்கிறது. 'கண்ணே என் கண்மணியே' என்று பாபநாசம் சிவன் இயற்றிய தாலாட்டுப் பாடலும் இந்த இராகத்தில் மிகவும் பிரபலம்.
காதலாகிக் கசிந்துருகி, கல்யாணப் பாடலாகித் தாலாட்ட வைக்கும் இராகம் குறிஞ்சி.....

முல்லை - தலைவி கூற்று

சுடர்செல் வானஞ் சேப்பப் படர்கூர்ந்து
எல்லறு பொழுதின் முல்லை மலரும்
மாலை என்மனார் மயங்கி யோரே
குடுமிக் கோழி நெடுநகர் இயம்பும்
பெரும்புலர் விடியலு மாலை
பகலும் மாலை துணையி லோர்க்கே.

-மிளைப்பெருங் கந்தனார்.- குறுந்தொகை

The sun goes down and the sky reddens, pain grows sharp,
light dwindles. Then is evening
when jasmine flowers open, the deluded say.
But evening is the great brightening dawn
when crested cocks crow all through the tall city
and evening is the whole day
for those without their lovers.

Translation **. George L Hart (Kurunthogai)**

அந்தி மாலைப் பொழுதில் அரும்பிடும் முல்லை, அது காதல் பிரிவின் சோகத்தை சொல்லத் தூண்டிடும். முல்லை நிலம் காடு, காட்டை சேர்ந்த அருவி, ஏரி என்று படர்ந்திடும்.
காட்டில் வளர்ந்த முல்லை வீட்டில் மலர்ந்திட வீதிகள் மணந்திடும். பாட்டில் பரவசம் தந்த முல்லைப்பண் 'ச ரி க ப த ச' என்று மோகனமாய் ஒலித்திடும் . மெல்ல மெல்ல, முல்லையில் உழையும் (ம) தாரமும்
(நி) இணைய செம்பாலைப் பண்ணாக மாறிடும் . 'ம' என்ற மதுரமான ஸ்வரமும், 'நி' என்ற நிகரில்லா ஸ்வரமும் இணைந்திட மோகனம், ஹரிகாம்போஜியாக உருவெடுத்திடும் .

காதலும் கடவுளும் மனித வாழ்வில் மறுக்க முடியாத உண்மைகள். மெய்யைப் பொய்யென்று சொல்லும் ஆன்மீகமும், பொய்யை மெய்யாக்கும் காதலும் தமிழ்க் கவிதைகளிலும், இசையிலும் பின்னிப் பிணைந்துவிட்ட உணர்வுகள். இதற்கு உதாரணமாக கடவுளின் மீது காதல் கொண்டு பாடிய ஆண்டாளையும், பெண்ணாய்த் தன்னை பாவித்துப் பாடிய திருமங்கை ஆழ்வாரையும் கொள்ளலாம்.

இந்த இனிய மார்கழிப் பொழுதில் பூவில் வண்டு வந்து கூடிட காதல் ததும்பும் மோகனப் பாடலும், எனது மனம் கவலை எனும் இருள் சூழ்ந்தால் என்ன செய்வேன் என்று கடவுளிடம் முறையிடும் ஹரிகாம்போஜி பாடலும் இங்கு கேட்டிடலாம்.

https://www.youtube.com/watch?v=7mo3OprklmU
https://www.youtube.com/watch?v=AfFNQOwSvHI

மருதம்

மருங்கு வண்டு சிறந்து ஆர்ப்ப,
மணிப் பூ ஆடை-அது போர்த்துக்
கருங் கயல்-கண் விழித்து, ஒல்கி,
நடந்தாய்; வாழி, காவேரி!
கருங் கயல்-கண் விழித்து, ஒல்கி,
நடந்த எல்லாம் நின் கணவன்
திருந்து செங்கோல் வளையாமை;
அறிந்தேன்; வாழி, காவேரி!

சிலப்பதிகாரம்

மருதம் -
பரந்து விரிந்த பச்சைப்புல் வெளியைக் குறிக்கும். மாலைப்படுகடாம் என்ற சங்க கால நூலில் மருதப்பண், வயலில் வேலை செய்த களைப்பு தீர விராளியர் பாடியதாக சொல்லப்பட்டிருக்கிறது. மருத மரம் புத்தருக்கு ஞானம் ஏற்பட்ட மரம் என்றும் ஒரு சில குறிப்புகள் சொல்கின்றன. புத்தருக்கு அரச மரத்தில் தான் ஞானம் ஏற்பட்டது என்று சொல்வோரும் உண்டு. அரச மரமா, மருத மரமா என்பதை அறியும் ஞானம் நமக்கில்லை....
மருதம் முக்கோணக் காதலை சொல்வதாகவும் சில இலக்கியக் குறிப்புகள் இருக்கின்றன. முக்கோணக் காதல் என்றாலே நம் நினைவுக்கு வருபவர்கள் கோவலனும், கண்ணகியும் மாதவியும் தான். காதலும், பிரிவும், துயரமும், காவிரியும், யாழும், இசையும், நடனமும், செங்கோலும் செம்மையாய் செப்பிடும் காவியம் சிலப்பதிகாரம். அதில் அரங்கேற்றுக் காதையில், பண்ணுப் பெயர்த்தல் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. பண்கள் பாலையாய் மாறியதில் இராகங்கள் பிறந்தன. தொனிகள் மாறுபட்டு ஒலிக் கதிர்கள் வேறுபட்டு பண்கள் பாலை என்று உருவெடுத்தன. உதாரணத்திற்கு 'அரும்பாலை' -சங்கராபரணம் ஆனது. கிரக பேதம் செய்ய செய்ய புதிய இராகங்கள் பிறந்தன. கொடிப்பாலை கரகரப்ரியாவாக, செவ்வழிப்பாலையும் விளரிப்பாலையும் தோடியாய் மாறியது. மேற்சம்பாலை கல்யாணியாக உருவெடுக்க, செம்பாலை ஹரிகாம்போஜியாகி, 'பதுமலைப் பாலை' -நடபைரவி ஆனது.

வண்ணங்கள் மாறி மாறி வாழ்க்கையில் வசந்தம் சேர்ப்பது போல், ஸ்வரங்கள் மாறி மாறி சுவை சேர்க்கிறது. மாறும் வண்ணங்களில் வார்த்தைகளோடு விழிகளுக்கும் செவிகளுக்கும் விருந்து கொடுக்கும் ARR
இன் கரகரப்ரியாவில் அமைந்த திரைப்படப் பாடல் இதோ ...

https://www.youtube.com/watch?v=15o-A50ZKpA

இசையும் நடனமும் இணைந்து நடந்து வர இந்தக் கால அரங்கேற்ற நிகழ்சிகளில் அரங்கம் ஏறும் திரு.பாபநாசம் சிவனின் மிகவும் பிரபலமான நடபைரவி பாடல் இதோ ...
https://www.youtube.com/watch?v=1RRePtN4OaE

நெய்தல்

நெய்தல் இருங்கழி நெய்தல் நீக்கி
மீனுநுண் குருகுஇளங் கானல் அல்கும்
கடல்அணிந் தன்றுஅவர் ஊரே
கடலினும் பெரிதுஎமக்கு அவருடை நட்பே.

Water lilies bloom
in the lagoons
where cranes part the water lilies
looking for fish
then fly away to stay
in fragrant seaside groves,
near my lover's village washed by the sea.

His love for me
is greater than the sea.

- Neithal (Ainkurunuru - 184)

நெய்தல் - கடலும் கடல் சார்ந்த நிலமும், அல்லி மலரும் அழகாய் அமைந்திடும் நிலம் நெய்தல்.

நெய்தல் நிலம் விளாப்பாபாலையோடு இணைக்கப்பட்டுள்ளது.

பூவர் சோலை மயில் ஆலப்
    புரிந்து குயில்கள் இசை பாட,
காமர் மாலை அருகு அசைய,
    நடந்தாய்; வாழி, காவேரி!
காமர் மாலை அருகு அசைய,
    நடந்த எல்லாம் நின் கணவன்
நாம வேலின் திறம் கண்டே;
    அறிந்தேன், வாழி, காவேரி!

பாலை

சிலப்பதிகாரத்தில் ,வேனிற்காதையில், இந்திர விழாவில், கோவலன் யாழிசைக்க, மாதவி பாடுகிறாள். ஸ்வரங்களை தவறாக கணக்கு போட்டு விடுகிறாள். தான் செய்த தவறை ஒப்புக் கொள்ளும் பக்குவம் இன்றி, மாதவி பொறாமை என்னும் தீயில் அவள் மூழ்கிவிட, காவிரியைப் பாடுவது போல் அவள் பாடும் பாடல், கோவலனுக்கு நெருஞ்சியாய் மாறுகிறது. துணிகளை மாற்றுவது போல் காதலி மாற்றுவதாய் அவள் பாடிய பாடல்

கண்ணகியை நினைவு படுத்த, கோவலன் மாதவியை விட்டுப் பிரிகிறான். இசையால் இணைந்த இருவரும் இசையால் பிரிகிறார்கள். மாதவி இங்கு விளரிப்பாலை பாடியது அவர்கள் பிரிவை அதிகப்படுத்தியது. வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் உணர்வுகளை ஆழமாய் தக்க வல்ல பாலை விளரிப்பாலை.... இந்தக் கால இராகம் தோடி....

ஆதியும் இன்றி அந்தமும் இன்றி பறந்து விரிந்த அண்டவெளியில், அலைகள் இருந்தாலும் ஆழம் மிகுந்த கடல் போல், மர்மங்கள் பொதிந்த இராகம் தோடி....

https://www.youtube.com/watch?v=NsCYGZjchp0

யாழ்கள் நான்கு வகையென சிலப்பதிகாரம் சொல்கிறது. இவை முறையே

பெரி யாழ் 21 தந்திகள்

மகர யாழ் 19 தந்திகள்

சகோத யாழ் 14 தந்திகள்

செங்கோட்டு யாழ் 7 தந்திகள்

இதைத் தவிர மயில் யாழ் என்றும் வில் யாழ் என்றும் இரண்டு வகை சொல்லப்பட்டிருக்கிறது.

மாதவி யாழிசையில் மெலிவு, சமன், வலிவு என்று மூன்று வித Octave களிலும் வாசித்த படி 12 இராசிகளுடன் இணைத்து நடனம் ஆடியதாக வரலாறு சொல்கிறது. மாதங்களுடனும், காலத்துடனும் இணைக்கப் பட்ட இசை மனித வாழ்வில் ஒன்றாகிப் போனது.

இசையும் தமிழும் பாகம் -2

தேவாரம்

"மாசில் வீணையும் மாலையும் மதியமும்
வீசு தென்றலில் வீங்கிள வேனியில்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நிழலே"
அப்பர்

தமிழிசை பற்றிய சங்க காலத் தகவல்களை சென்ற இதழில் கண்டோம். அப்பரின் இந்த இனிய தேவாரப்பாடலுடன் அடுத்த காலகட்டத்தில் நுழைவோம். திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் (அப்பரும்), சுந்தரரும் இசைத்த பதிகங்கள் தேவாரம் எனப்படுகிறது. மாணிக்க வாசகரின் பொன்மொழிகள் திருவாசகம் என்று அழைக்கப்படுகிறது. முதல் மூன்று திருமுறைகள் சம்பந்தராலும், அடுத்த மூன்று திருமுறைகள் அப்பராலும், ஏழாம் திருமுறை சுந்தரராலும், எட்டாம் திருமுறை மாணிக்க வாசகராலும் எழுதப்பட்டவை. திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் ஒன்பதாம் திருமுறையாக, திருமூலரின் திருமந்திரம் பத்தாம் திருமுறை ஆனது. பெண்பாற் புலவர்களில் சிறந்தவரான காரைக்கால் அம்மையாரின் பிரபந்தம் பதினோராம் திருமுறையாக, சேக்கிழாரின் பெரிய புராணம் பன்னிரண்டாம் திருமுறை என்று அழைக்கப்படுகிறது.
இவற்றை திருக்கோவில்களில் ஓதுபவர்கள் 'ஓதுவார்' என்று அழைக்கப்பட்டனர். நாவுக்கரசரின் தமிழில் நஞ்சும் அமுதமாய் மாறிவிட, அஞ்செழுத்து ஓதிநின்றதில் மதயானை அடங்கிவிட அஞ்சாது, அவன் நாமம் சொல்லிவிட பஞ்சாய்ப் பறந்திடும் துன்பங்கள்.

திருப்பாவை / நாலாயிர திவ்ய பிரபந்தம்

திருமுறைகள் பற்றி சொல்லும்போது அதே காலகட்டத்தில் வைணவ சமயத்தில் எழுதப்பட்ட திருப்பாவை பற்றியும் சொல்ல வேண்டும். தினம் தோறும் விடியற்காலையில் பெண்டிரை வீடு வீடாய் சென்று எழுப்பி ஆண்டாள் பாடிய திருப்பாவை முப்பதும் மார்கழியில் காலைப் பொழுதில் பாடப்பட்டு வருகிறது. திருப்பாவை கொச்சக கலிப்பா வகையைச் சார்ந்தது. பெண்களின் புடவையில் இருக்கும் கொசுவம் பெரிதும் சிறிதுமாக இருப்பது போல் இந்த பா வகையில் சந்தங்கள் பெரிதும் சிறிதும் அமைந்திருப்பது குறிப்பிடத் தக்கது. சீராக சந்தம் இருப்பின் அது செவிக்கு அமுதமாய் இருப்பதில் ஆச்சரியமில்லை. ஆனால் பேசும் பேச்சே பாட்டாய் அமைவது அதிசயமே. பண்டைய தமிழரின் வாழ்வில் இசையும், இலக்கணமும், சந்தமும், ஸ்வரங்களும் ஒன்றோடு ஒன்றாக பின்னிப் பிணைந்ததில், நேர்த்தியாக உடுத்திய புடவையின் கொசுவம் போல் திருப்பாவை அழகு கூடி இருகிறது. நித்தம் நம் நெஞ்சினில் நின்றிடும் பா திரு 'பாவை' இயற்றிய திருப்பாவை. மேலும் ஆழ்வார்கள் எழுதிய நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் பக்தியும் தமிழும் இரண்டற கலந்து கொஞ்சும். அவை பக்தியை ஊட்டும் செய்யுள்களாகவே கோவில்களில் வாசிக்கப்பட்டு வருகின்றன. சங்கு சக்கரத்துடன் அன்றும் இன்றும் என்றும் காத்தாளும் நாராயணனை நாவினால் பாடியவர்கள் ஆழ்வார்கள். ஒன்பதாம் நூற்றாண்டிலும், பத்தாம் நூற்றாண்டிலும் பன்னிரண்டு ஆழ்வார்களால் எழுதப்பட்ட பாசுரங்களை ஒன்று சேர்த்து 'நாலாயிர திவ்ய பிரபந்தம்' என்ற பெயரில் நமக்கு தொகுத்தளித்தவர் நாதமுனி என்பவர். காணாமல் போன பொக்கிஷத்தை கண்டுபிடித்துக் கொடுத்தவர் அவர். பாசுரங்கள் யாவும் ஒவ்வொரு பண்ணில் அமைந்திருக்கின்றன. இவற்றை தற்கால இராகங்களில் பாடுபவர்கள் மிகவும் குறைவு.

அனுதினமும் நாராயணனின் பன்னிரண்டு நாமங்களை சொல்லியபடி நாளை ஆரம்பிப்பது உசிதம். நம்முள் ஒவ்வொரு அங்கத்திலும் நாராயணன் அமைந்திருப்பதாக சொல்லப்படிருக்கிறது. தினமும் அவனது பன்னிரண்டு பெயர்களைப் பாடாவிட்டாலும் இந்த மார்கழியில் மட்டுமாவது பாடுவோம். பன்னிரண்டு நாமங்கள் முறையே ... கேசவா, மாதவா, நாராயணா, கோவிந்தா, விஷ்ணு, மதுசூதனா, திரிவிக்கிரமா, வாமனா, சிரீதரா, இருடிகேசா, பத்மநாபா, தாமோதர என்பவை.

திருப்புகழ்

தமிழும் இசையும் பிரிக்க முடியாது என்பது நிதர்சனம். தமிழும் முருகனையும் பிரிக்கமுடியாது. தமிழ்க் கடவுளான அழகன் முருகனுக்கு அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் மூலம் கூடுதல் அழகு சேர்ந்தது என்றால் மிகையாதாது. பதினைந்தாம் நூற்றாண்டில் திரு. அருணகிரி நாதர், முருகனின் அறுபடை வீடுகளை சுற்றி வந்த படி, அழகான தமிழில் சந்தங்களுடன் சுவையான பாடல்களை அருளிச் செய்தார். ஒவ்வொரு பாடலுக்கு முன்னரும் என்ன சந்தம்

என்பதையும் குறிப்பிட்டு இருக்கிறார். தாளம் தப்பாது, தந்தனா தந்தானா என்று தமிழில் திருமுருகன் புகழை சொல்லி இருக்கிறார். பல வருடங்களுக்குப் பிறகு, மிகுந்த சிரமங்களுடன் இந்தப் பாடல்களை கண்டு பிடித்து திருத்தணியை சேர்ந்த திரு. V T சுப்ரமணியப் பிள்ளை தொகுத்தளித்திருக்கிறார். அவரைத் தொடர்ந்து பலர் இந்த சேவையில் ஈடுபட்டிருக்கிறார்கள். தற்போது கண்டுபிடிக்கப்பட்ட 1334 திருப்புகழ் பாடல்கள் அனைத்தையும் கௌமாரம் என்ற வலைதளத்தில் எண்ணிக்கை வரிசைப்படி காணலாம்.

தமிழ் மூவர்கள்

முத்துத் தாண்டவர்

தற்போதைய கர்நாடக சங்கீத பாணி பதினைந்தாம் நூற்றாண்டில் உருவானது. பாடல்கள் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற முறையில் பாடப்பட்டன. அந்த காலகட்டத்தில் பிறந்து தமிழில் பற்பல பாடல்களை ஜதி தாளக்கட்டுடன் எழுதியவர் திரு. முத்துத் தாண்டவர் அவர்கள். இவர் தமிழிசை மூவர்களில் ஒருவராக போற்றப்படுகிறார். இவரது காலம் 1524- 1640 என்று வரலாறு சொல்கிறது. இவர் கன்ம நோயினால் அவதிப்பட்டார், இதனால் குலத் தொழிலான நாதஸ்வரம் இசைக்க முடியாது போனார். ஆனால் பாடல் இயற்றும் வரம் பெற்றார் என்றும் , பார்வதி தேவியின் அருளால் உடல் நலம் பெற்று முத்து போல் பிரகாசம் ஆனார் என்று வரலாற்றுக் குறிப்புகள் சொல்கின்றன. அதனாலேயே இப்பெயர் பெற்றார். சீர்காழியில் இருந்து இறைவனின் ஆணை பெயரில் சிதம்பரம் சென்றார். செல்லும் வழியில் பூலோக கையிலாயகிரி சிதம்பரம் என்று தொடங்கும் பாடலை எழுதினார். சிவனின் பாதங்களைப் பாடிய இவரது பாடல்கள் 'பதம்' என்ற வரிசையில் இடம் பெற்று இன்றும் பல நாட்டிய நிகழ்ச்சிகளில் நடராசனை வழிபடும் நாட்டியமாக ஆடப்பட்டு வருகின்றன. நோய்வாய்ப்பட்டதால் 'அருமருந்தென்னும் திருமருந்தென்று அவர் இயற்றிய பாடல் மருத்துவரான என்னை மிகவும் கவர்ந்தது. பிறப்பு, இறப்பு என்ற இந்த காலசுழற்சி நோயில் இருந்து விடுவிக்கும் மருந்தை வேண்டிய தத்துவப் பாடல் இது.

அருணாசலக் கவிராயர்

பண்டிதர்கள் மட்டுமே படித்து வந்த இராமயணத்தை எளிய தமிழில் இசைவடிவில் எழுதிய பெருமை அருணாசலக் கவிராயரைச் சாரும். தமிழ் மூவரில் ஒருவராக கருதப்படுகிறார். சைவராய் இருந்து இராமனைப் பாடியவர் இவர். மேற்கூறப்பட்ட பாடல் இராமயணத்தில் உருக்கமான ஒரு காட்சி. இராமனிடம் சீதை கொண்ட காதலும், உரிமையும் என்னை விட்டு நீர் மட்டும் கானகம் எப்படி செல்ல முடியும் என்று கேட்கும் விதமாக எழுதப் பட்ட பாடல். உணர்வுகளைச் சொல்ல இசையை விட வேறு நல்ல வழி இல்லை என்று சொல்லலாம். மொழி புரியாத போதும் இசை நமக்குப் புரிய வைத்திடும். தியாகய்யரின் இராம கீதங்கள் இப்படித் தான் நமக்குப் புரிந்தன. மொழி புரிவதினால் அருணாசலரின் இராம கீதங்கள் இன்னும் கூடுதல் சுவை அளிக்கின்றன.

ஆயிரம் விண் மீன்கள் இருந்தாலும் தண்மதிக்கு ஈடில்லை; அல்லித் திரளாய்ப் பூத்தாலும் தாமரைக்கு ஈடில்லை; பல மரங்கள் இருப்பினும் கற்பக மரத்திற்கு ஈடில்லை , எத்தனை தலங்கள் இருந்தாலும் தில்லை சிதம்பரத்திற்கு ஈடில்லை ... ஆஹா ... என்ன வரிகள் ...

மாரி முத்தா பிள்ளை

தமிழ் மூவரில் ஒருவராக போற்றப்படும் மாரி முத்தாப் பிள்ளையின் பாடல்கள் பலவும் இன்று காணமல் போயின. வெகு சில பாடல்களே பாடப்பட்டு வருகின்றன. அதுவும் தமிழிசை பரப்பும் நோக்கத்துடன் திரு.சஞ்சய் சுப்ரமணியன் போன்ற ஒரு சில இசைக் கலைஞர்கள் மட்டுமே பாடுகிறார்கள். இவரது பாடல்களில் 'காலைத் தூக்கி நின்றாடும் ' என்று தொடங்கும் பாடல் மிகவும் பிரபலம். இவர் நிந்தா ஸ்துதியில் பாடல்கள் எழுதுவதில் வல்லவர். அதாவது வஞ்சப் புகழ்ச்சி அணியில் இறைவனை நிந்தனை செய்வது போல் போற்றுபவர். 'என்ன பிழைப்பைய்யா ' இது என்று சிவனைப் பார்த்து இவர் கேட்பது வகையைச் சார்ந்த பாடல். சிவனைப் பற்றி பெரிய புராணத்தில் வரும் வாக்கியம் 'கல்லால், வில்லால், சொல்லால் என்று அமைகிறது. ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு கதையை சொல்லி விடும்.

இசையும் தமிழும் பாகம் 3

தமிழ் மூவருக்குப் பின்னர், கர்நாடக சங்கீதத்தில் புரந்தரதாசருக்கும் தியாகய்யருக்கும் இடையில் உள்ள காலகட்டத்தில் இருந்த வெறுமையை ஊத்துக்காடு சுப்பய்யரின் பாடல்கள் நிறைவு செய்கின்றன. பாரம்பரிய சங்கீதமும், நாட்டிய சங்கதிகளும், பக்தியும் பரவசமும் பெருகிடும் பாடல் வரிகள். அவை இன்றும் பிரபலமாக பாடி வருவதால் அவரது பாடல்கள் தற்காலத்தை சேர்ந்தவை போன்ற பிரமை ஏற்படுகிறது.

கற்பனை ஸ்வரங்களும் நிரவல்களும் மாறுபட்டாலும் சங்கதிகள் சாகித்யம் படி பாடுவது மரபு. ஆனால் சங்கதிகளில் மாற்றங்களை உண்டு செய்த மகா கவி அவர். அவரது பாடல்களில் இடையில் வரும் துரிதமான நடையும், துள்ளும் இசையும் கால்களை ஆட வைக்கும்.

தாயே யசோதாவில் தாலாட்டும் தோடியாகி, நாட்டைக்குறிஞ்சியில் பால்வடியும் முகமாகி, சுருட்டியில் கள்ளப்பார்வை ஒன்றைத் தந்து, அலை பாய்ந்து காதலாய் கவர்ந்திழுக்கும் கானடாவாகி , பேகடாவில் கண் கண்ட தெய்வமாகி, முன் செய்த தவப்பயனாய் முக்தி தரும் மாதவனை பூபாளத்தில் நமக்குத் தந்த ஊத்துக்காடு சுப்பையருக்கும், அதை பிரபலமாக்கிய நீடாமங்கலம் கிருஷ்ணமூர்த்தி பாகவதருக்கும் நாம் கடமைப் பட்டிருக்கிறோம்…

குறவஞ்சி

புரியாத சந்தங்களும் இலக்கணமும் சேர்ந்தால் மட்டுமே அது இலக்கியமாகாது. மக்களின் வாழ்வை மக்களுக்குப் புரியும் வகையில் சொல்வதும் இலக்கியமே. தமிழ் இலக்கியங்களில் சிற்றிலக்கியம் என்று போற்றப்படும் நூல்களில் இரட்டை மணி மாலை, மும்மணிக் கோவை, நான்மணி மாலை, கலம்பகம், அந்தாதி, பள்ளு குறம் குறிப்பிடத் தக்கவை. இவற்றில் குறவர் நிலையைச் சொல்லும் 'குறம்' வகையைச் சார்ந்த நூல் திருக்குற்றால குறவஞ்சி.

தமிழர்கள் பலவேறு வகையில் கலையைப் போற்றி வந்தனர் என்பதற்கு குற்றால குறவஞ்சி எடுத்துக் காட்டு. கிராமிய மணத்துடன், நாட்டுப்புற வளத்துடன் 18 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இந்த காவியம் சொல் வளமும் பொருள் வளமும் நிறைந்தது. நம்முள் ஒளிந்திருக்கும் சிங்கனும், சிங்கியும், வசந்தவல்லியும், பாங்கியும் வெளியில் வந்திட அவர்களை நடனமாட வைக்கும் பாடல்கள் இவை.

இசை நயம் பொருந்திய இனிய பாடல்கள். இன்றும் பல நாட்டிய நிகழ்ச்சிகளில் இந்த குறவஞ்சிப் பாடல்கள் மிகவும் பிரபலம்.

பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் ஆகிய எழுவகைப் பருவ மகளிரும் காதலித்த கடவுளை கண் முன் நிற்கும் குறத்தியின் கைக்குறி சேர்த்து வைக்கும்.

இனிய ஓசை நயம், எதுகை மோனை, தொடை வனப்பு, உலக வழக்க சொல், சேரி மொழி என்று எல்லாம் கலந்து மொழிக்கு எல்லை இல்லை என்பதை உணர்த்தும் நூல் திருக் குற்றால குறவஞ்சி….

பாரதிகள் பலர்

'பார் அதிரப் பாடியவன் பாரதி'. 'பார் அது யார்' என்று கேட்கும் படி பாடியவன் பாரதி. 'பாரதி'யான கலைவாணியே வியக்கும் படி பாடியவன் பாரதி.

'பாரதி' என்றவுடன் நம் நினைவுக்கு வருவது முறுக்கு மீசையுடனும் தலைப்பாகையுடனும் வெற்றி நடை நடந்த சுப்ரமணிய பாரதி தான். ஆனால் தமிழிசை வரலாற்றில் பல பாரதிகள் உண்டு. அவர்களில் சிலரை பற்றி இங்கு ஆராய்வோம்

கவி குஞ்சர பாரதி

முதாலவதாக 'கவி குஞ்சர பாரதி' பற்றி அறிவோம். இவர் தனது பன்னிரண்டாவது வயதில் இருந்து பாடல்கள் பாடியுள்ளார். சிவகங்கை மன்னர் இவருக்கு இந்தப் பட்டப் பெயரை வழங்கினார். இவர் பாடிய பாடல்களில் அழகர் குறவஞ்சி மிகவும் பிரபலம். ஸ்கந்த புராண கீர்த்தனைகள், மாலிருஞ்சோலை, அடைக்கல மாலை கயற்கண்ணி மாலை, திருவேங்கட மாலை, பேரின்ப கீர்த்தனைகள் போன்றவை மிகவும் சிறப்பு வாய்ந்தவை. பிற்காலத்தில் இவரது பேரன் 'கோடீஸ்வர ஐயர்' இவரின் நினைவாக குஞ்சர தாசன் என்ற முத்திரையில் பல பாடல்கள் எழுதியுள்ளார்.

இவரது பாடலில் மிகவும் பிரபலமான பாடல் .. இவன் யாரோ சகியே..

இதில் வரும் இறுதி வரிகள் பரவலாக பேசப்பட்டவை..

'பாதத்தில் பூதேவியும், பக்கத்தில் நூலா தேவியும், மார்பில் துளசியுடன் ஸ்ரீதேவியும் இருப்பதாகப் பாடியுள்ளார். பெருமாளுக்கு மூன்று தேவிகள் உண்டென்ற கதை இந்தப் பாடலைக் கேட்ட பின் தான் எனக்குத் தெரியும். நப்பின்னை என்றும் நூலா தேவி என்றும், கோதை என்றும் எத்தனை பெயர்கள்..

மழவை சிதம்பர பாரதி

இசையை ஒரு பணியாய்,வேலையாய் செய்யாமல் தனது வாழ்க்கையை இசைக்கு அர்ப்பணித்த உன்னத இசை வல்லுனர் மழவை சிதம்பர பாரதி. இவர் பல இனிய பாடல்களைப் பாடியிருக்கிறார். ருக்மிணி கல்யாணம், துருவ சரித்திரம், நாயன்மார் சரித்திரம் போன்ற கதைகளையும் பாடல் வடிவில் எழுதி இருக்கிறார். ஹரி கதை சொல்வதிலும் சிவ கதை சொல்வதிலும் ஈடு பட்டார் என்று வரலாறு சொல்கிறது. இவரது பாடல்களில் 'மா மயூர மூதிலேறி' பிரபலமானது. தமிழ் இலக்கனத்தில் 'ஒரு குணம் தழுவிய பல் உரிச் சொல் (ஒரு பொருட் பன்மொழி), பல் குணம் தழுவிய ஓர் உரிச்சொல் என்று உண்டு. இதை தொல்காப்பியர் கூழ் வரும் செய்யுளில் விளக்குகிறார்.

கடி என் கிளவி

வரைவே கூர்மை காப்பே புதுமை

விரைவே விளக்கம் மிகுதி சிறப்பே

அச்சம் முன்தேற்றுஆ ஈரைந்தும்

மெய்ப்படத் தோன்றும் பொருட்டாகும்மே

நூல்: தொல்காப்பியம் (#866, உரியியல்) பாடியவர்: தொல்காப்பியர்.

இதில் கடி என்ற சொல்லுக்கு பத்து பொருட்கள் உண்டு என்கிறார். ஆங்கிலத்தில் இதை Homonym என்று சொல்வார்கள். தமிழின் சிறப்பான இந்த மரபை ஒட்டி, மழவை சிதம்பர பாரதி தனது பாடல்களில் ஒரே சொல் பல பொருட்களைத் தரும் படி பாடி இருகிறார் இது இவரின் தனி சிறப்பு. ஆனந்த பைரவியில் அமைந்த இவரது 'பூ மேல் வளரும் அன்னையே' மிக மிக அருமையான பாட்டு. இதை கேட்டால் பெருகிடும் ஆனந்தத்தில், உடல் வலி, மன வலி, உயர் இரத்த அழுத்தம் குறைந்திடும் என்பதில் ஐயமில்லை.... இதற்கு சில அறிவியல் சான்றுகளும் உள்ளன.

கோபால கிருஷ்ண பாரதி

தியாகய்யரின் கால கட்டத்திலேயே வாழ்ந்து தமிழில் பல கிருதிகளை இயற்றிய இன்னொரு பாரதி திரு. கோபால கிருஷ்ண பாரதி. இவரது பாடல்களில் இசை நயமும், சொல் வளமும், மொழி வளமும், பக்தியும் அத்வைதமும் பெருகி நிற்கும். அந்தக் காலகட்டத்தில் வடமொழியும் தமிழ் மொழியும் இரண்டறக் கலந்து இருந்தது என்பது இவரது பாடல்களில் வெளிப்படும். இவரின் பல பாடல்கள் பிரபலம். தியாகய்யர் இவரைப் பார்க்க வந்த போது 'ஆபோகி' இராகத்தில் பாட்டிசைக்க சொல்லிக் கேட்டதாகவும், அதற்கு இவர் 'சபாபதிக்கு வேறு தெய்வம்' இசைத்ததாகவும் வரலாறு சொல்கிறது. இவரது பாடலைக் கேட்டாலே உடனே 'தில்லை சிதம்பரம்' செல்ல மனம் ஆசைப்படும்..

'பித்தம் தெளிய மருந்தைத் தேடி, எப்போ வருவாரோ என்று மனம் ஏங்கியே நிற்கும் வேளையில், இன்னமும் சந்தேகப் படலாமோ சபாபதிக்கு இணை வேறு உண்டோ என்று ஆணித்தரமாய் ஆபோகியில் பாட்டிசைக்க , மார்கழி திருவாதிரைக்கு தில்லை வெளியிலே ஆடும் சிதம்பரம் ஆடி நிற்க, சிவலோக நாதனைக் காண சிதம்பரம் போகாமல் இருப்பேனோ நான்!! என்று நம் ஒவ்வோருவரையும் எண்ண வைக்கும் இவரது பாடல்கள் .

இன்றைய காலத்திலும் உலகெங்கும் சாதியையும், மதமும், நிறமும் இனமும் மக்களை வேறு படுத்திக் கொண்டே இருக்க , இறைவன் அனைவருக்கும் பொது என்று அந்தக் காலத்தில் பாடியவர் இவர். இவரது கதாகாலட்சேபங்களில் நந்தனார் சரித்திரம் மிகவும் பிரபலம். பறையன் குலத்தில் பிறந்த நந்தனாருக்கு இறைவன் தரிசன் கொடுத்த கதை அது.

இசையும் தமிழும் பாகம் 4

கவி குஞ்சர பாரதியின் பேரன் கோடீஸ்வர ஐயர், இவரை குஞ்சர தாசன் என்று சொன்னால் இசை உலகில் அனைவரும் அறிவர். முருக பக்தி மிகுந்த இவர் பல பதிகங்ககளும், அந்தாதிகளும் எழுதியுள்ளார். இவரது பாட்டானர் பெயரும் கோடிஸ்வர ஐயர். ஆனால் பட்டப்பெயர் கவி குஞ்சர பாரதி. அவரை முன்னோடியாகக் கொண்டு தனது பாடல்களில் குஞ்சர தாசன் என்று முத்திரையுடன் இவர் பாடினார்.

இவர் பல பாடல்களை குறிப்பாக தமிழில் இயற்றிஇருக்கிறார். முதல் முறையாக 72 மேளகர்த்தா இராகத்திலும் பாடல் பாடியிருக்கிறார். அந்தப் பட்டியலைக் காண விரும்புவோர் http://en.wikipedia.org/wiki/Koteeswara_Iyer என்ற வலைதளத்தில் காணலாம்.

இந்த மகத்தான சாதனை படைக்க முயன்ற போது பலர் இவரை ஏளனம் செய்தனர். தடைகள் பல சொன்னதாகவும் வரலாறு சொல்கிறது.

36 இராகங்களில் இவர் பாடி முடித்திருந்த போது ஒரு இசை வல்லுனர் மது பானம் அருந்திய போதையில், மேலும் வேறு இராகங்களில் பாட முடியுமா என்று இவரிடம் சவால் விட்டார். அப்போது தான் ஜோதிஸ்வரூபிணி இராகத்தில் 'கானாம்ருத பானம் இருக்க வேறு பானம் ஏது அபிமானம் உனக்கேன் ' என்ற பாடலைப் பாடினார்.

தியாகய்யர் அவரது கனவில் வந்து ஆசிகள் கூறியதாகவும், அதற்கு மறு நாள்

'இனி நமக்கொரு கவலையும் இல்லை என்றும் இன்பமே மனமே

தியாகராஜ ஸ்வாமி கனவில் வந்து காட்சி தந்ததால் ' என்ற பாடலை பிலஹரி இராகத்திலும் இராமா இரவிகுல சோமா ' என்ற பாடலை பைரவி இராகத்திலும் பாடினார். தியாகய்யரின் சாயலிலும், தீக்ஷிதரின் சாயலில் சிட்டாய்ஸ்வரங்களும் இராக முத்திரைகளையும் படைத்தார். தனது இறுதி முத்திரையாக 'உளமறியாத' என்று தொடங்கும் பாடலை தன் தலையணைக்கு கீழே எழுதி வைத்தபடி முருகனடி சேர்ந்தார்.

இவரது பாடல்களை பிரகடனம் செய்தவர் திரு.S ராஜம் அவர்கள். இவர் வீணை பாலசந்தரின் உடன் பிறந்த சகோதரர். இவரிடம் M.S. சுப்புலட்சுமியும் ML வசந்தகுமாரியும் பாடல் கற்றுக் கொண்டதாகவும் குறிப்புகள் சொல்கின்றன.

பாபநாசம் சிவன்

அம்பா நீ இரங்காவெனில் என்று அடாணாவில் கெஞ்சி, தேவியின் துணையை கீரவாணியில் தேடி, யசோதா செய்த தவத்தை காபியில் ஆலாபித்து, கந்தனை காக்க வா வா என்று வராளியில் விளித்து, வள்ளி தெய்வயானையோடு சண்முகனை நடபைரவியில் நடனம் ஆட வைத்து, பராத்பரனை வாசஸ்பதியில் வாஞ்சையோடு அழைத்து, பிறவா வரம் தருவாயோ என்று லதாங்கியில் விண்ணப்பித்து, கற்பகமே என்று மத்யமாவதியில் கருத்துடன் உருகி, கபாலியை மோகன வாகனத்தில் வலம் வரச் செய்து, நவரசத்துடன் கானடாவில் நம்மை எல்லாம் விளையாட்டு பொம்மை ஆக்கினார் பாபநாசம் சிவன் என்றால் மிகையில்லை.

இவர் போலகம் என்ற ஊரில் பிறந்து, திருவனந்தபுரத்தில் வளர்ந்து, பாபநாசத்தில் சிவப்பழமாய் திரிந்து, பின்னர் மயிலை மாடவீதிகளில் வலம் வந்தவர். இவர் இயற்பெயர் இராமய்யா, பாடல் இயற்றிய பெயர் இராமதாசன். சிறப்பு பட்டப் பெயர் தமிழ்த் தியாகய்யர்.

2500 க்கும் மேற்பட்ட கிருதிகளைப் பாடியுள்ளார். திரை இசையிலும் பற்பல பாடல்களை பாடியுள்ளார்.

இவருக்கு சரீரம் பூஞ்சையாய் இருந்தாலும் சாரீரம் கம்பீரமாக அமைந்தது. அதனால் பாடல்களும் சொர்கட்டுகளும் தானாக வந்து விழுந்தன. இவர் மிகுந்த இரக்க குணம் உடையவர் என்பதை சொல்ல ஒரு சிறு சம்பவம் படித்தேன். இவரது எண்பதாவது பிறந்த நாள் கிருஷ்ண கான சபாவில் விமரிசையாக கொண்டாடப்பட்டது. விழா முடிந்து அனைவரும் வீடு திரும்பினர். இவர் மட்டும் தனது அபிமான சைக்கிள் ரிக்க்ஷா வருவதற்காக காத்திருந்தாராம். ஏன் கார் சொல்லவில்லை என்று கேட்டதற்கு, காருக்கு கொடுக்கும் 50 ரூபாய் இவனுக்கு கொடுத்தால், இவன் குடும்பத்தினர் ஒரு வாரத்திற்கு நன்கு உணவருந்துவார்கள் என்றாராம்.

வைத்யநாதன் ஐயர் என்று வலைதளத்தில் தேடினால் விடுதலைப் போரட்ட வீரரும், ஹரிஜன மக்களை கோவிலுக்குள் நுழைய விட்ட சமூக சேவகரும் பற்றி ஏராளமான தகவல். இசை உலகில் மனம் மயக்கும் இந்த விருத்தமும் பாடலும் சிந்துபைரவியில் இயற்றிய 'அணை வைத்யநாத ஐயர்' பற்றி அவ்வளவாகத் தகவல் இல்லை. அணை ஐயா என்பவர்கள் அணை ஐயர் மற்றும் ஐயா ஐயர் என்று அழைக்கப்பட்ட இரண்டு சகோதரர்கள். இவர்களது பரம்பரையில் துரைஸ்வாமி ஐயரும் இருந்தார். இவரது மகன் பெயர் மகா வைத்யநாத ஐயர். இவர் 72 மேளகர்த்தாவிலும் வரும்படியான 'ப்ரணதார்த்திகரா' என்று தொடங்கும் பாடலை இராக மாலிகையில் பாடியிருக்கிறார்.

அம்புஜம் கிருஷ்ணா

திரு. கே. வி. இரங்கராஜ ஐயங்காரின் மகளாய் 1917 இல் பிறந்தார். காரைக்குடி கணேசன் மற்றும் கணேச பாகவதரிடம் இசைப் பயிற்சி பெற்றார். சிறு வயதிலேயே திருமணம் செய்து விட்டார்கள். திருமணத்திற்கு பிறகு புது டெல்லி சென்று கல்லூரியில் படித்தார். சம்சார சாகரத்தில் வாழ்ந்து வந்த இவர், 1951 வருடம் திருவையாற்றில் தியாகய்யரின் சமாதிக்கு செல்ல நேர்ந்தது. அங்கு மனம் உருகிப் பாடத் துவங்கினார். முதல் பாடலாக 'உன்னையல்லால் உற்ற துணை வேறு உண்டோ ' என்று துவங்கும் பாடலை மீனாக்ஷி அன்னை மீது பாடினர். அதற்கு பிறகு இவருக்கு, தெலுங்கு, தமிழ், கன்னடம், வடமொழி, ஹிந்தி என்று பல மொழிகளில் பாடல்கள் சரளமாக வந்து குவிந்தன.

இவரது பாடல்கள் மிக எளிமையாகவும், சொல்வளம் மிக்கதாகவும், உருக்கமாகவும் இருக்கும்.

உள்ளப் பெருக்கை ஒருவித தடையுமின்றி உரைப்பதில் வல்லவர். இவரது பாடல்கள் உள்ளத்து உணர்ச்சிகளை அப்படியே சொல்லும்.
ஒரு நாள் மிகவும் தயக்கத்துடன் தான் இயற்றிய பாடல்களை தன் கணவரிடம் காட்டினாராம். அவர் உடனே அவற்றை இசை வல்லுநர் முசிரி சுப்ரமணியன் ஐயரிடம் காண்பித்தாராம். அவர் மிகவும் பரவசப்பட்டு இவரது பாடல்களுக்கு இசையமைத்தாராம். மேலும் எழுத ஊக்குவித்தாராம். அது முதல் மேலும் பல பாடல்கள் இயற்றியுள்ளார். சிலவற்றிற்கு இவரே இசையமைத்துள்ளார். பிற்காலத்தில் செம்மங்குடி ஸ்ரிநிவாச ஐயர், வி வி சடகோபன், T N சேஷ கோபாலன், வேதவல்லி போன்ற பல பிரபல கலைஞர்கள் இவரது பாடல்கள் பலவற்றிற்கு இசை அமைத்து அவற்றை மேன்மேலும் பிரகடனம் செய்தார்கள்.
பரி பூரண சரணாகதியை நம்பிய திருமதி கிருஷ்ணா தனது பாடல்களில் முத்திரை எதுவும் பதிக்க வில்லை. மிகவும் எளிய வாழ்க்கையை மேற்கொண்டு தனது பாடல்களை பிரபலம் ஆக்குவதில் ஆர்வம் காட்டாமல் இருந்தார். பிற்காலத்தில் புகழ் மதுரையில் பல சங்கீத பள்ளிகள் திறக்கவும் சங்கீத விழா மண்டபம் திறக்கவும் ஏற்பாடு செய்தார். இவரது பாடல்களை நான்கு பகுதிகளாக 'கீதமாலா' என்ற பெயரில் வெளியிட்டுள்ளார்கள்.
ஓம் நமோ நாராயணா, மின்னல் கொடியோ, குருவாயூர் அப்பனே, காண்பது எப்போ என் ஐயனை, கண்ணா வா, என்ன சொல்லி அழைத்தால் வருவாயோ போன்ற பாடல்கள் மிகவும் பிரபலம்.

பெரியசாமி தூரன்

தமிழ் நாட்டில் ஈரோடு அருகில் மஞ்சக் காட்டு வலசு என்ற கிராமத்தில் பிறந்து, தமிழார்வமும், இசையார்வமும், தேசப்பற்றும் மிகுந்து வாழ்ந்தவர் பெரியசாமி தூரன். நம்மில் பலர் தாயே திரிபுரசுந்தரி என்ற சுத்த சாவேரி பாடல் முதல், மாண்ட் இராகத்தில் முரளிதரா கோபாலா, பிருந்தாவன சாரங்காவில் 'கலியுக வரதன் வரை பல பாடல்களை விரும்பிக் கேட்டிருக்கிறோம். இவர் பெயர் தெரியாதவருக்கும் இவரது பாடல் தெரியும். இவர் தான் எழுதினார் என்பதை அறியாமலே இவர் பாடல்களைக் கேட்டு மகிழ்ந்திருக்கிறோம்.

இவர் மகாகவி பாரதியின் பாடல்களைப் பற்றி பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளார். தமிழ் கலைக் களைஞ்சியத்திற்கும் குழந்தைகள் கலைக் களைஞ்சியத்திற்கும் ஆசிரயராய் இருந்தார். அதாவது தமிழ் encyclopedia விற்கு ஆசிரியர். பல நூல்களை எழுதியுள்ளார். ஆன்மீகம் மற்றும் இன்றி பல சமுதாயப்பாடல்களையும் எழுதி யுள்ளார். தேசிய விருதான பத்மபூஷன் விருதும், தமிழ் நாட்டு அரசின் விருதான கலைமாமணி விருதும் பெற்றவர். இவரது நூல்களை தமிழக அரசு நாட்டுடமையாக்கி சிறப்புப்படுத்தியுள்ளது. பாடல்கள் எழுத எழுத கர்நாடக இசைப் பயிற்சியும் பெற்றார். பல இசை வித்வான்களுடன் சேர்ந்து தனது பாடல்களுக்கு இசை அமைத்தார்.

பல தமிழ் நிகழ்ச்சிகளில் தமிழில் விநாயகர் பாடலைத் தேடும் போது இவரது 'கணநாதனே குணபோதனே' கைக்கொடுக்கும் .இவரது கர்நாடக இசை பாடல்களின் பட்டியலையும், அத்துடன் பாடல் பதிவுகளையும் சிலவற்றையும் இந்த வலை தளத்தில் காணலாம்.

https://sites.google.com/site/periasamythooran/Home/Keerthanas-mp3

திருவாசகத்துக்கு உருகார் ஒரு வாசகத்துக்கும் உருகார் என்பார்கள். முழுப்பாடலே வேண்டாம், அந்த ஈசனின் மகன் 'முருகனை' பெயர் சொல்லி அழைத்தாலே போதும். உள்ளம் உருகிவிடும் என்கிறார் பெரியசாமி தூரன்.

பல்லவி

முருகா முருகா என்றால் உருகாதோ உந்தன் உள்ளம்

அவனை அழைத்தால் நம் உள்ளம் உருகும். உருகிய உள்ளம் இன்னும் கொஞ்சம் குகனைக் கொஞ்சி கொஞ்சி அழைக்கும். பாலன் தான் அவன் ஆனால் அவனே நம் யாவரையும் பேணிக் காப்பான். எதுகையும் மோனையும் துள்ளி விளையாட இந்தப் பாடலைக் கேட்டால் முருகனின் கால் சதங்கை ஒலி நம் நெஞ்சத்தில் மிஞ்சி நிற்கும்….

காஞ்சிப் பெரியவர் பற்றி 'புண்ணியம் ஒரு கோடி நான் புரிந்தேனோ என்ற இவர் பாடல் மிகவும் உருக்கமாக இருக்கும். தினம் ஒரு பாடல் எழுதுவது என்ற வழக்கத்தை பல ஆண்டுகளுக்கு கொண்டிருந்தாராம். தூரலாய் இல்லாமல் இந்தத் தூரனின் வாய் மொழி பெருமழையைப் பொழிந்ததில் தமிழ் இசைப்பயிர் மேலும் மேலும் வளர்ந்தது.

இராஜாஜி

ஒரு பாடல் பாடினாலும் அதில் குறையே இல்லாமல் நிறைவாகப் பாடி என்றும் நம் நினைவில் நிற்பவர் திரு.சக்கரவர்த்தி இராஜகோபாலாச் சாரியார்.

குறை ஒன்றும் இல்லை மறைமூர்த்தி கண்ணா

இராகமாலிகையில் அமைந்த இந்தப்பாடலை M.S . சுப்புலக்ஷ்மி 1969 ஆம் ஐக்கிய ஆண்டில் நாடுகள் சபையில் பாடினார். அது முதல், இந்தப் பாடல் மிகவும் பிரபலமானது. சுதந்திர போரட்ட வீரராகவும், வைஷ்ணவராகவும், எழுத்தாளராகவும் பல சாதனைகள் செய்த இராஜாஜி, எழுத்து மூலம் தனக்கிருக்கும் பல முகங்களை நமக்கு வெளிப் படுத்தினார். அவர் எழுதிய 'சக்கரவர்த்தி திருமகனையும்' 'வியாசர் விருந்தையும்', தினமும் நான் பள்ளிகூடத்தில் இருந்து பாட்டியின் வீட்டுக்கு வந்தவுடன் விரும்பிப் படித்ததுண்டு. எடுத்த புத்தகத்தை படித்து முடிக்காமல் தூக்கம் வந்ததில்லை அந்த காலத்தில்!.
தான் அந்த கடவுளை கண்டு கொள்ளும் ஞானம் பெறவில்லையே என்ற உள்ளர்த்தமும், அந்தக் காலத்தில், தூண்டத்தகாதவர்களை கோவிலுக்குள் அனுமதிக்க மறுத்ததையும், எல்லாவறிற்கும் மேலாக குறையின்றி வாழ்க்கையை இரசிக்க வேண்டும் என்ற உயர் கொள்கையையும் இந்தப் பாடல் மூலம் சொல்கிறார். மிக எளிதான பாடல். எப்போது கேட்டாலும் நிறைவைத் தரும் பாடல்.

நான்கே நிமிடத்தில் நம் நெஞ்சில் இருக்கும் எதிர்மறையான எண்ணங்கள், அவநம்பிக்கை (Pessimistic thoughts) எல்லாம் போய் எதையும் இரசிக்கும் மனப்பக்குவத்தைத் தர வல்ல பாடல்…

கல்கி

கல்யாணி என்ற மனைவியின் பெயரையும் கிருஷ்ணமூர்த்தி என்ற தன் பெயரையும் இணைத்து கலியுகம் எதிர்நோக்கி இருக்கும் 'கல்கி' யை தன் புனைப் பெயரை வைத்துக் கொண்டவர். இவரின் எழுத்து பற்றி எழுத வேண்டுமானால் ஒரு இடுகை போதாது. பொன்னியின் செல்வன் முதல் சிவகாமி செய்த சபதம் வரை பார்த்திபனின் கனவும், கள்வனின் காதலியும் நம் நெஞ்சில் அலையோசை போல் ஒலித்துக் கொண்டே இருப்பார்கள் . இவரது படைப்புகளை சென்னை நூலகம் தனது வலைதளத்தில் இலவசமாக பதித்துள்ளது.
http://www.chennailibrary.com
இவர் மிக நேர்த்தியான இசை விமர்சகரும் கூட. நகைச்சுவை கலந்து விமர்சிப்பதில் வல்லவர். ஒரு முறை ஒரு பாடகர் 'காலைத் தூக்கி'என்று தொடங்கும் பாடலை பாடினாராம். அதில் மிக அதிகமான நேரத்திற்கு நிரவல் செய்தாராம்.

அதற்கு கல்கி, 'தூக்கிய காலை சிவபெருமான் எப்போது கீழே வைப்பார் என்றாகிவிட்டது' என்று தன் விமரிசனத்தில் குறிப்பிட்டருந்தாராம்.

இவர் திரைப்படங்களுக்காக பல பாடல்களை எழுதியுள்ளார். இதில் மிகவும் பிரபலமான கீதம் காற்றினிலே வந்து நம்மை களிப்பூட்ட வைக்கும் கீதம்.

திரு. நீலகண்ட சிவன் 1839-1900

சிஷ்யனைப் பற்றி சொல்லி ஆசானைப் பற்றி சொல்ல மறக்கலாமோ? பாபநாசம் சிவனை சிவனே கதி என்று பாடி ஆனந்த நடமாடுவார் தில்லை என்று அறிமுகப்படுத்தியவர் திரு. நீல கண்ட சிவன். 'என்றைக்கு சிவ கிருபை வருமோ', 'என்ன வந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை' என்று ஆணித்தரமாக பல நல்ல பாடல்களை தமிழில் தந்து ஒரு பிரதோஷ தினத்தன்று சிவனடி சேர்ந்தார்.

இவரது பாடலை சஞ்சய் சுப்ரமணியன் பாடி இந்தப் பதிவில் கேட்போம் .. இந்தப் பதிவில் பாடுபவரின் பாதி முகம் மட்டும் பார்ப்பதற்கு சிதம்பர இரகசியம் போல் பளீர் பளீர் என்று வந்து வந்து போகும் . ஆனால் கேட்பதற்கு அந்த பாத சிலம்புகள் கலீர் கலீர் என்று பூர்விகல்யாணியில் சுவையாய் இருக்கும்.
https://www.youtube.com/watch?v=4WQxFQeMZjY

திரு. லால்குடி ஜெயராமன்- 1930-2013
தனக்கென்று ஒரு பாணி உருவாக்கி, வார்த்தைகளே இன்றி விரல்களால் பேசிய வித்வான் திரு. லால்குடி ஜெயராமன். பற்பல வித்வான்களுடன் வாசித்து, பின்னர் தனிக்கச்சேரிகள் பல செய்து, பாடல்கள், பதங்கள், வர்ணங்கள், தில்லானாக்கள் என்று பல எழுதி அடுத்த தலைமுறையினரை ஆஸ்கர் விருது வரை உருவாக்கிய இசை மேதை. கர்நாடக வயலின் இசையை சர்வதேச நிலைக்கு உயர்த்தியவர். பல மொழிகளில் பாடல்களை இயற்றியுள்ளார். இவரது வலைதளம் இவர் வரலாறு, பாடல்கள் பட்டியல் என்று மிக அழகாக அமைந்துள்ளது.
http://www.lalgudis.com

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் ..

தினம் தினம் அலுக்காமல் வந்து தன் கடமையைச் செய்யும் கதிரவனும், அன்பின் வடிவமான அன்னையும் சக்தியின் உருவம் என்பதில் ஏதும் ஐயமுண்டோ ??
பௌளி இராகத்தில் அமைந்த வர்ணம் இது … பாடல் வரிகள் ஐந்து தான் ஆனால் அதில் பொதிந்துள்ள இசைக் குறிப்புகள் அண்ட வெளிக்கு வெளிச்சம் தரும் அருணோதயம் போல் சக்தி வாய்ந்தது.
அருணோதயமே அன்பின் வடிவமே
அன்னையே நின் பதம் என்றும் பணிவோம்
இந்தப் பாடலை அவர் சந்ததியின் விரல் வழி வழியும் இசையில் கேட்போம்
https://www.youtube.com/watch?v=gpd4-UKhYDk

திரையிசையில் கர்நாடக இசை

'திரையிசையில் கர்நாடக இசை', என்பது அண்டவெளியில் உருவாகும் அதிசயப் பனிப்பாறை போல பெரியது. இந்த இடுகை அந்தப் பனிப்பாறையின் ஒரு சிறு நுனி மட்டுமே !! எந்தன் நெஞ்சில் நீங்காத நளினகாந்தியை நான் கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன்! அதை உங்களுடன் பகிர்கிறேன். ஏழு ஸ்வரங்களுக்குள் எத்தனை இராகங்கள் பந்துவராளியாய் சுருண்டன!!

இசைத்தமிழ் இனிதே செய்த திருவிளையாடலாய் திரையிசையில் நுழைந்தது. மலர்ந்தும் மலராத கங்கைக் கரைத் தோட்டம் பழமுதிர்ச் சோலையாய் விரிந்தது. சின்னஞ்சிறு வயதில் கொஞ்சும் சலங்கையுடன் வாராய் நீ வாராய் என திரையுலகமும் வரவேற்றது. வாராயோ வெண்ணிலவே ! நீ நீலவான ஓடையில் நீந்துவதை கண்ணோடு காண்கிறேன்! உனக்குள் நானே என்று நாதம் நம் ஜீவனாய் மாறியது. மனமும் கனம் குறைந்து ஆபேரியில் இலேசாகியது.

சங்கீத ஸ்வரங்கள் கரகரப்ரியாவில் சேர்ந்து திரையிசையில் மெல்லிசைக்க, அடாணாவில் தந்தார்கள் அரியாசனம் கர்நாடக இசைக்கு...
நானின்றி யார் வருவார் என்று தங்க இரதத்தில் வந்து காலை நேரப் பூங்குயிலாய் ஆபோகியும் வலம் வந்தது. தூங்காத விழிகளாய் அழகிய மேகங்கள் அமிர்தவர்ஷிணியில் பொழிந்தன. அன்பென்ற மழையிலே நனைந்திட, போய் வா மகளே என்று ஆனந்த பைரவி கெஞ்சிட, நதியே நதியே என்றும் நாட்டியமாடிட, மெட்டு போடு என்று கேட்டவுடன், கொஞ்ச நாள் பொறு தலைவா என்று ஆனந்த பைரவி பல்வேறு உணர்வுகளை சொல்லி நின்றது.

மயக்கும் மாலைப் பொழுதில், நிலவே என்னிடம் நெருங்காதே, கலையே என் வாழ்க்கையில் காண இன்பம் என்று மனம் சொல்லிட, கொலுசே கொலுசே என்று பாகேஸ்வரி துள்ளியது.

நான் தேடும் செவ்வந்திப் பூவாய் ஹிந்தோளம் போலதொரு ஹிந்துஸ்தானி இராகம் சந்தரகோன்ஸ். அது அழகு மலராய் ஆடியே, வெள்ளிச் சலங்கைகள் சிணுங்க மாலைப் பொழுதின் மயக்கத்தில் நானாக ஆனால் நானில்லை என்று நிஷாதம் மட்டும் வேறுபட்டு ஒலித்தது.

ஒரு நாள் போதுமா என்று தர்பாரில் கேட்டால் , ஒரு இராகம் போதுமா இல்லை ஒரு மலர் போதுமா? முல்லை மலர் என்பேனா பொன் என்பேனா எத்தனை பாடல்களை இங்கு நான் அடுக்குவேன்! ஒரு பூமாலையை நான் வாங்கி வந்தால், அந்த ஆகாய வெண்ணிலா, காற்றை என் வாசல் வரை அழைத்து வரும். கல்யாணக் களிப்பில் தேனிலா மலரையும் மௌனமாக்கும். தர்பாரி கானடாவில் கொஞ்சும் சலங்கை ஒலி நம் செவியில் ஒலித்துக் கொண்டே இருக்கும்.

தத்தித்தோம் என்று தில்லானாவாய் மீண்டும் மீண்டும் வந்து, விளையாட்டாய் ஒட்டகத்தை கூட கட்டி செல்லும் இராகம் தர்மாவதி !

கண்கள் இருந்தால் அழகான இராட்ஷசி கூட தலை குனியும் தாமரையாய் மாறும். சின்னப் பிள்ளை அழைக்க ரீதிகௌளை சிங்காரமாய் இசைக்கும். கொஞ்சும் மைனாக்கள் பிருந்தாவனத்தில் சாரங்கனைத் தேடும்.

மார்கழி திங்கள் அல்லவா அதனால் முத்து மணி மாலை சூடாமல் செண்பகமே சூடிக் கொடுத்தாள் அந்த சுடர் கொடி! நானும் ஒரு சிந்துவைப் போல் தமிழ்ப் பாடல் தேடியதில் வைரமாய் பல பைரவிகளும் கிடைத்தன.

ஹம்சத்வனியில் அந்த ஸ்ரீரங்கநாதனை வந்தனம் செய்தபடி இந்தக் கட்டுரைப் பயணத்தை இத்தோடு முடிக்கிறேன். இப்படியாக நாமும் தமிழிசை வரலாற்றை தொல்காப்பியம் முதல் தற்கால கவிஞர்கள் வரை கண்டோம். மார்கழியில் மட்டும் இசையை பற்றி எண்ணாமல் எப்போதும் எண்ணிக் கொண்டிருப்போம். மேலும் மேலும் தமிழிசை வளர நம்மால் முயன்றவரை உதவுவோம் . இசைக்கு மொழி எல்லை என்பது உண்மையான போதும், மொழி அறிந்தால் இசையை இன்னமும் அனுபவிக்க முடியும். தற்கால கவிஞர்களும் இசை வல்லுனர்களும் தமிழிசையை மென்மேலும் வளர்க்க வாழ்த்துக்கள் !
இனிய பொங்கல் வாழ்த்துக்கள் !

என்னோடு பயணித்தவருக்கும், ஊக்குவித்தவருக்கும் நன்றி! வலைதளம் என்ற வர்ணக் களஞ்சியத்தில் இருந்து கற்று கொண்டேன், கேட்டு இரசித்தேன், எழுதப் பழகினேன். என்னைப் போல் தங்கள் நேரத்தை இசைக்காக வலைப்பூவினிலும், யூ டுப் இசைப் பதிவுகளிலும், விக்கிபீடியாவிலும் செலவழித்த இசைப் பிரியர்களுக்கு இந்த கட்டுரையை சமர்ப்பிக்கிறேன்.

இந்தக் கட்டுரைகளில் பிழைகள் பல இருக்கலாம்… பல நல்ல கலைஞர்களைப் பற்றி சொல்லாமல் விட்டுப் போயிருக்கலாம். மன்னிக்க வேண்டுகிறேன் ..
குறைகள் இருக்கலாம். ஆனால் குறைகள் தெரியாமல் அந்த மறை மூர்த்தி கண்ணா மட்டும் இசையில் தெரியட்டும் … இன்னும் இன்னும் என்று மூழ்க வைக்கும் தமிழிசை வெள்ளம். அதில் சற்று இலேசாக கால் நனைக்க முடிந்ததே என்று மனமகிழ்வோடு விடை பெறுகிறேன்.

இந்த கட்டுரைகளை எனது வலைப்பூவில் காணலாம்.
http://mana-vasanai.blogspot.com/

இந்த கட்டுரைக்காக உபயோகித்த சில வலைதளங்கள் ..
http://en.wikipedia.org/wiki/List_of_Film_Songs_based_on_Ragas

http://www.sangeethabhyas.com/MovieSongs.php

http://www.rhythemmusic.net/component/content/article/303/1360-raga-based-tamil-film-songs-all

வரத்திருமகள் - வரலட்சுமி நிரஞ்சன்